DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW10 | Caste | : | |
| Name | : | கதிரேசன் | Age | : | 67 |
| F/N. | : | குருசாமி | Occupation | : | தாசில்தார் (ஓய்வு) |
| Village | : | பரமக்குடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 08-th day of December 2022.

**08.12.2022.**

**முதல் விசாரணை**

நான் தாசில்தாராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.02.2013 முதல் 31.12.2013 வரை நான் இராமநாதபுரம் வட்டாட்சியராக பணிபுரிந்து 31.12.2013 அன்று வயது முதிர்வு காரணமாக பணியில் இருந்து ஓய்வு பெற்றேன். எனக்கு முன்பாக இராமநாதபுரம் வட்டாட்சியராக திரு. அன்புநாதன் என்பவர் பணிபுரிந்தபோது கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களிடம் இருந்து பிறப்பு இறப்பு சான்று சம்மந்தமாக வரப்பெற்ற உத்தரவில் சில உண்மை தன்மை அறிவதற்காக ஒரு அறிக்கை அனுப்பி இருந்தார். அதன் அடிப்படையில் நீதித்துறை நடுவர் அவர்கள் சில உத்தரவுகளில் தன்னுடைய கையொப்பம் உள்ளது என்றும், சில உத்தரவுகளில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் பதில் அறிக்கை அனுப்பி இருந்தார்கள். அதன் அடிப்படையில் கனம் நீதித்துறை நடுவர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இந்த வழக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக பல்வகை மனு எண். 4095/2012 நாள் 21.09.2012, மனு எண். 3894/2012 நாள் 03.10.2012 தேதியன்று உத்தரவான நீதித்துறை நடுவர் எண்.2க்கு கூடுதல் பொறுப்பில் இருந்து அந்த உத்தரவு நகலில் அவர் பெயரில் உள்ள கையெழுத்து அவருடையது அல்ல என்றும் நீதித்துறை நடுவர் எண்.1ல் தாக்கல் ஆகி உள்ள உத்தரவு நகலில் உள்ள கையெழுத்து அவருடையது அல்ல என்றும் தெரிவித்திருந்தார். நான் இந்த கோப்பை பார்வையிட்டு உத்தரவு மற்றும் மனுக்களை ஒளி நகல் எடுத்து உண்மை நகல் என சான்றொப்பமிட்டு கொடுத்தேன். (**நான் ஆய்வாளருக்கு கொடுத்த கடிதம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக நான் நீதிபதியை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. தாசில்தார் அன்புநாதன் என்பவருக்கும், நீதிபதிக்கும் இடையே நடந்த விஷயங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எங்களுடைய அலுவலகத்திற்கு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படும் பிறப்பு இறப்பு சான்றிதழ் சம்மந்தமான உத்தரவுகளின் நகல் தான் வரும் என்றால் சரிதான். அதனுடைய அசல் நீதிமன்றத்தில் இருக்கும். மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் மனுக்களின் அசலும் நீதிமன்றத்தில் தான் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் அலுவலத்திற்கு மனுவின் நகல் தான் வரும் என்றால் சரிதான். ஆய்வாளர் விண்ணப்ப கடிதம் என்னிடம் கொடுத்த பின் நான் எங்களுடைய அலுவலகத்தில் இருந்த உத்தரவு நகலில் இருந்து இன்னொரு நகலை எடுத்து தான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் முறையாக சட்டவிதிகளை பின்பற்றி அந்த நகலை எடுத்து ஆய்வாளருக்கு தரவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் கொடுத்த விண்ணப்ப கடிதத்தின் நகல் எங்களுடைய அலுவலகத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த கடிதத்தில் என்னென்ன ஆவணங்கள் கோரப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த கடிதத்தை பார்த்தால் தான் என்னென்ன ஆவணங்கள் கோரப்பட்டது என்ற விபரத்தை சொல்ல முடியும் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து வந்த கடிதத்தின் நகல் நீதிமன்றத்தில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். Cr.M.P.No.4095/2012 உத்தரவு நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தின் உத்தரவு என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**